# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண். 54

## வனம்

# அறிவிப்புகள்
# 2015–2016

## திரு.எம்.எஸ்.எம். ஆனந்தன்
வனத்துறை அமைச்சர்

## சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை 2015–2016 ஆம் ஆண்டிற்கான

## அறிவிப்புகள்

### வனம்

**1. தமிழ்நாடு உயிர்பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டம்**

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** 2015–2016 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் ஐந்தாவது ஆண்டு பணிகளாக உயிர் பன்மைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மாநிலத்தின் **1000** கிராமங்களில் **1.02** கோடி மரக்கன்றுகள் தனியார் நிலங்களில் நடவு ஆகிய திட்டப் பணிகள் முக்கிய இலக்காகக் கொண்டு **ரூ.115.31** கோடி மதிப்பீட்டில் **(ரூ.28.31** கோடி பணியாளர் சம்பளம் உள்பட) மேற்கொள்ளப்படும்.

**2. தமிழ்நாடு பல்லுயிர் பாதுகாப்பு இயக்கத்தினை பலப்படுத்தி அதன் மூலம் பலன் மற்றும் பயன்களை பங்கீடு செய்தல்**

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** தமிழ்நாடு பல்லுயிர் பாதுகாப்பு இயக்கத்தினை பலப்படுத்தும் வகையில் மாநில பல்லுயிர் வாரியத்திற்கு தனியாக அலுவலகம் அமைக்கவும், மேலாண்மைக் குழுக்கள் அமைக்கவும், மக்கள் பங்களிப்புடன் 25 குழுக்கள் உருவாக்கவும், மாவட்ட / வட்டார அளவில் விழிப்புணர்வு திட்டங்களை ஏற்படுத்தவும் மற்றும் பல்லுயிர் பெருக்க ஐந்து புராதன இடங்களை அறிவிப்பு செய்யவும் ரூ.75 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**3. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தை மேம்படுத்துதல் மற்றும் நிதி உதவி அளித்தல்**

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** குன்னூரில் உள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு குறுகியகால வட்டியில்லாக் கடனாக ரூ.30 கோடி, 5 வருடங்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் கீழ்கண்டவாறு பயன்படுத்த வழங்கப்படுகிறது:-

(i) 31.07.2015 வரை தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சிராப்பள்ளி மற்றும் அரசு ரப்பர் கழகம், நாகர்கோவில்–இருந்து பெற்ற கடன் தொகையான ரூ.20.89 கோடி அசல் மற்றும் வட்டியினைத் திருப்பி செலுத்துதல்.

(ii) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரியும் ஊழியர்கள்,

தொழிலாளர்கள், ஒய்வு பெற்ற ஊழியர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொருள் ஈந்தோருக்கு வழங்க வேண்டிய தொகையான ரூ.7.52 கோடியினை வழங்குதல்.

(iii) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு அடுத்து வரும் 3 மாத காலத்திற்கான செலவினங்களுக்கான ரூ.1.59 கோடி நடைமுறை மூலதனமாக வழங்குவதால் நிறுவனத்திற்கு வட்டி சேமிப்பு ஏற்படும்.

## 4. மூன்று வன கால்நடை மருத்துவ மையங்கள் ஏற்படுத்துதல்

அதிகரித்து வரும் வன–உயிரின மோதல்களை திறம்பட எதிர்கொள்ள ஏதுவாக, வன விலங்குகளை அமைதியடையச் செய்யத் தகுதியான கால்நடை அலுவலர்களின் ஒத்துழைப்பு அவசியமாகிறது. மனித–வன உயிரின மோதல் மேலாண்மையில் வன விலங்குகளுக்கு குறிப்பிட்ட அளவோடு மயக்க மருந்து செலுத்துதல் மற்றும் மயக்கமடையச் செய்தல் ஒரு முக்கியமான அம்சமாகும். வன உயிரினங்களும் வன உயிரின மோதல்களும் அதிகமாக உள்ள கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி பகுதிகளில் தற்போது இரண்டு வன கால்நடை அலுவலர்கள் உள்ளனர். எனவே, மனித வன–உயிரின மோதல்கள் நிகழும் பரந்து விரிந்த நிலப்பரப்பினைக் கருத்தில் கொண்டு

அதிகப்படியான கால்நடை அலுவலர் குழுக்களை அமைப்பது அவசியமாகிறது. எனவே, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** மேலும் மூன்று வன கால்நடை மருத்துவ மையங்கள் ஈரோடு, கிருஷ்ணகிரி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ரூ.3.90 கோடி செலவில் அமைக்கப்படும்.

**5. மாநில பணிமூப்புப் பட்டியலில் இடம் பெற்று, வனக்காவலருக்குரிய உடல் தகுதியில்லாத தோட்டக் காவலர் / சமூக வனப் பணியாளர்களை, வன ஓய்வு விடுதிகளில் விடுதிக் காவலர்கள் / சமையலர்கள்/மாலிகளாக பணியமர்த்துதல்**

மாநில முதுநிலைப் பட்டியலில் இடம்பெற்றுள்ள **163** செ.மீ.க்குக் குறைவான உயரம் உள்ள தோட்டக்காவலர்கள் மற்றும் சமூக வனப் பணியாளர்கள், தமிழ்நாடு வனச் சார்நிலைப்பணி விதிகளின்படி, முறையாக வனக்காவலர் பணியிடங்களில் பணியமர்த்த தகுதியற்றவர்களாகிறார்கள். எனவே, **89** வன ஓய்வு விடுதி காவலர் மற்றும் **117** சமையலர்/ மாலி பணியிடங்களைக் கூடுதலாக ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டு உள்ளது. **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** இவ்வாறு உபரியாக

ஏற்படுத்தப்படும் **206** வன ஓய்வு விடுதி காவலர் மற்றும் சமையலர்/ மாலி பணியிடங்களில், மாநில முதுநிலைப் பட்டியலில் இடம்பெற்று வனத்துறைக்காகவே பணியாற்றிவரும் தோட்டக் காவலர்கள்/ சமூக வன ஊழியர்கள் பணி அமர்த்தப்படுவார்கள்.

## 6. தமிழ்நாடு வன உயர் பயிற்சியகத்தில் தனிச் சிறப்பு வாய்ந்த மையம் ஏற்படுத்துதல்

கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வன உயர் பயிற்சியகம் தென்னிந்தியாவில் உள்ள பழமை வாய்ந்த வனவியல் கல்வி நிறுவனமாகும். **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ‘மனித வன உயிரின மோதல்கள்’ மற்றும் ‘பருவநிலை மாற்றம்’ போன்ற தலைப்புகளில் உயர்ந்த கல்வி நோக்கத்துடன் தமிழ்நாடு வன உயர் பயிற்சியகத்தில், கூட்டுறவு முறையில் செயல்பட, தனிச் சிறப்பு வாய்ந்த மையம் ஒன்று அமைக்கப்படும். இதற்காக கூடுதல் பணியாளர்கள் ஏதேனும் மாற்றுப்பணி முறையிலோ அல்லது ஒப்பந்த அடிப்படை முறையிலோ தேவையில்லை. முதற்கண் இதற்கென மாநில நிதியிலிருந்து

ரூபாய் **25** இலட்சங்கள் நிதி ஒதுக்கப்படும். இந்தச் சங்கமானது, தேவைப்படும் கூடுதல் நிதியை தனியார் அமைப்புகளிடமிருந்து பெற்று சுயமாகவே பூர்த்தி செய்து கொள்ளும்.

## 7. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தில் தைலம் மற்றும் முந்திரித் தோட்டங்கள் உற்பத்தி செய்தல்

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் வருவாயினைப் பெருக்கும் பொருட்டு ரூ.14.18 கோடி மதிப்பீட்டில் உயர்தர படியாக்கம் செய்யப்பட்ட கன்றுகளைக் கொண்டு 4600 எக்டர் பரப்பில் தைலத் தோட்டங்களும், உயர்ரக முந்திரி ஒட்டுக் கன்றுகளைக் கொண்டு ரூ.2.79 கோடி மதிப்பீட்டில் 850 எக்டர் பரப்பில் முந்திரித் தோட்டங்களும் உற்பத்தி செய்யப்படும். மேலும், 2015–16 ஆம் ஆண்டில், முந்திரிக்கொட்டை மூலப் பொருட்களைக் கொண்டு உயர் மதிப்புடைய தரமான முந்திரிப் பருப்புகளை வெளிச் சந்தையில் விற்பனை செய்ய ரூ.14.00 இலட்சங்கள்

செலவில் விருத்தாசலம் மண்டலத்திற்கு உட்பட்ட ஜெயங்கொண்டத்தில் முந்திரி பதப்படுத்தும் பிரிவு ஏற்படுத்தப்படும்.

**8. வால்பாறை பகுதிகளில் தமிழ்நாடு அரசுப் பேருந்து கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகளில் அப்பகுதி பொதுமக்கள் அறிந்து விழிப்புடன் இருக்கும் வகையில் யானைகள் நடமாட்டம் குறித்து உடனுக்குடன் முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் வசதி ஏற்படுத்துதல்**

தங்களது பகுதிகளில் காட்டு யானைகளின் நடமாட்டத்தினை பொதுமக்கள் தெரிந்து கொள்ள முடியாத காரணத்தினால், யானைகளால் பல மனித உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ஒரு முன்மாதிரி நடவடிக்கையாக, வால்பாறையில் யானைகளால் ஏற்படும் மனித உயிரிழப்பினை குறைப்பதற்காக தமிழ்நாடு வனத்துறை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மற்றும் இதர நிறுவனங்களின் கூட்டு முயற்சியோடு வால்பாறை பகுதியில் ஆறு வெவ்வேறு

வழித்தடங்களில் இயங்கும் உள்ளூர் பேருந்துகளில் செல்லும் பயணிகளுக்கு தகவல் இணைப்பின் வாயிலாக யானைகள் நடமாட்டம் குறித்து தெரிவிக்க, உடனுக்குடன் முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கும் அமைப்பு ஏற்படுத்தப்படும். இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையால், யானைகள் நடமாட்டம் உள்ள பகுதிகளைத் தவிர்த்து மக்கள் தங்கள் பயணத் திட்டங்களை திட்டமிட்டு பயணம் செய்ய இயலும்.

**எம்.எஸ்.எம். ஆனந்தன்**
வனத்துறை அமைச்சர்